உ

சிவமயம்



துன்னாலை தாமரைக் குளத்தடியைச் சேர்ந்த

# அமரர் கந்தப்பர் கதிரேசு

அவர்களின்.

சிவபதப் பேறுகருதிய


# நினைவு மலர்.

1996.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். கந்தப்பர் கதிரேசு
# அவர்கள்



மலர்வு : 1915. 06. 15 உதிர்வு : 1996. 01. 18

## திதிப்பா

அபூர்வ யுவ வருசுஷ தைநல் திங்கள் தனில்
அபர பட்சுஷ திரயோதசி திதியதனில் – வினைமுடித்து
புண்ணியனாம் கதிரேசு அவனிவாழ்வு நீத்து
அம்பரனின் தாளடைந்தான் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் சென்ற

திரு கந்தப்பர் கதிரேசு அவர்களின்

மறைவு குறித்த

இரங்கற்பா

அன்புமலர் திருமுகமும் அழகொளிருங் கண்ணோக்கும்
இன்புருவமாம் உடலழகும் ஏற்றமுள்ள அருட்பொலிவும்
கண்டவர் போற்றுகின்ற கருணையுள்ள மன நிறைவும்
கொண்டதொரு பெரியோனே கூடுவிட்டுப் போனாயோ

மாசில்லா மனதுடையாய் மலர்ந்த திருப்பொலிவுடையாய்
தேசமலர் சிவனருளே சிறந்ததென்ற திடமுடையாய்
பேசரிய புண்ணியத்தில் பெருமையுடன் கடமை செய்தாய்
ஈசனருள் உனையணைக்க சிவபதமே ஏகினாயோ

அண்டினார்கள் அயலார்கள் சுற்றமெல்லாம் ஆதரித்தாய்
வந்தனர்க்கும் வறியவர்க்கும் மற்றுமுள்ள அடியவர்க்கும்
சிந்தனையில் சிவனை வைத்து சிறப்புமிக உதவி செய்தாய்
இந்தவகைப் புண்ணியத்தால் சிவபதமே ஏகினாயோ

சந்ததியோர் செய்ததவம் பலித்ததென தழைத்தவன் நீ
முந்தியதோர் நல்வினையால் முதன்மை பெற்ற தலைவனாய்
சொந்தமுறை ஈவு இரக்கம் தொடர்ந்திட நீ கடமை செய்தாய்
சுத்தமிலாச் சிவனருளே உனை அழைக்க அங்கு சென்றனையோ

மனைவியொடு இல்லறத்தை மாசில்லாமுறை நடத்தி
துணைவரொடும் சுற்றமொடும் தூய்நிலை வாழ்ந்தவன் நீ
உயர் நிலையில் உமதுபணி நாளும் செய்து உயர்வுற்றாயே
அயர்வடைந்து நாமெல்லாம் துயருறல் அறியாது எங்குற்றாயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியத்தில் வல்லமையாய் நீ வளர்ந்து வலைபயின்று
வாலிபத்தில் முன்வினையால் கற்பரசி சின்னம்மாவை
ஆவலுடன் மணமுடித்து இல்லறத்தை நல்லறமாக்கி
தேசுடைய புத்திரர்கள் தோன்றிவாழ நீவிட்டு எங்குற்றாயோ?

புண்ணியத்தின் நற்பயனால் மருமக்கள் வாழ்வு சிறப்புற்றோங்க
நண்ணியதோர் அருள் பெருக்கி இன்புற்று வாழ்ந்தாய் நீயே
இன்னமும் நீ செய்ததவம் ஏற்றமாக இனிதான பேரபூட்ட மக்கள்
நண்ணிடக் கண்டே மகிழ்ந்தாய் நீயே எங்குற்றாய்?

குலம் வளர்க்க குல தெய்வம் பிள்ளையாரைக் கும்பிட்டாயே
அவனருயால் கோவில் சென்று கும்பிட்டுருகி வாழ்ந்தாய் ஐயா
அறம்பல செய்தவனே அதிக செல்வம் தேடி வைத்தாய்
ஒரு குறையும் வாராமல் சகோதரரை நீவாழ விட்டுஎங்குற்றாயோ?

ஊரார்கள் போற்றிடவே உண்மைவழி கடமைசெய்தாய்
காரணர் கமக்காரர் உயர்வடையக் கடமை செய்தாய் நீ
தாராள சிந்தையுடன் செல்வமோங்க சேவை செய்தாய்
ஓயாத தோண்டு செய்து தலைமைதனை நாட்டி எங்குற்றாயோ?

குலதெய்வம் தாமரைக்குளத்தடி வாழ் கணபதியைக் கும்பிட்டேந்தி
நலம் பெற்ற ஐயோனே நாயகனே உன்பெருமை பெரியதே ஐயா
இறைவன் உனையழைத்து சிவலோகம் சேர்த்தே விட்டால்
தவம்பெரிது செய்தவன் நீ சிவபதத்தே நீடுவாழ்க வாழ்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் நற் பேறு

ஊருக்கொரு நல்லவனென்று பலரும் போற்ற வாழ்ந்து எமக்கு பேர் பெற்றுக் கொடுத்த உத்தமனே நாம் நற் பேறு பெற உமதுடலை உருக்கி எமக்காக வாழ்ந்தீர்கள். எம்மீது பாசமழை பொழிந்து உத்தமராக்க உழைத்தீர்கள். எமக்கெல்லாம் நல்வழி காட்டி நல் வழிப்படுத்தினீர்கள். உம்மை எம்மால் மறக்க முடியுமோ? அன்பொழுக ஐயா, மாமா, அப்பப்பா, அம்மப்பா என்றழைக்க உம்மைப் போல் இனியார் எமக்குள்ளார்? எம்மால் தாங்கமுடியாத துயரைத் தாங்கி உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

குடும்பத்தினர்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்விகத் துதி

### விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

### தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்னெஞ்சத் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஒநூர்ந்த செல்வன் நீயே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருகிப் பொழுதினைச் சுருக்கும்
புழுந்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் துணிந்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருழுவ தினியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவரறியா மாணிக்க மாலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் சென்றவெஞ் சிவனை
திருவீழி மழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர வென்கண் குளிர்ந்தனவே


## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புகழ்.

ஏறுமயில்ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org